செ.வெ.எண்: 585 நாள்: 18.07.2008

ELCOT
Adding Value Th

<u>பத்திரிக்கைக் குறிப்பு</u>

பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தரமான மடிக்கணினிகளை (Laptop) குறைந்த விலையில் வாங்கி உபயோகப்படுத்துவதற்கென்று எல்காட் நிறுவனம் Student Laptop Scheme என்ற திட்டத்தை துவக்கி உள்ளது. ரூபாய் 28,297 மற்றும் ரூபாய் 30,497 என்ற விலைகளில் உயரிய மடிக்கணினிகளை மொத்த விலைக்கு வாங்கித் தருகின்றது. இந்த சர்வதேச தரத்தினாலான மடிக்கணினிகளை மாணவ மாணவியர்கள் பார்த்து, அதை இயக்கி, அதன்பின் வாங்கலாமா என்பது குறித்து முடிவெடுப்பதற்காக ஒரு மடிக்கணினி கண்காட்சியை சென்னை நகரத்திலும், அனைத்து மாவட்ட ஆட்சியரகத்திலும் எல்காட் நிறுவனம் 19.07.2008 அன்று நடத்த உள்ளது. சென்னையில் மட்டும் 300 மடிக்கணினிகளைக் கொண்டு நந்தனத்தில் பெரியார் மாளிகையில் உள்ள தரைத்தளத்தில் இந்தக் கண்காட்சி நடைபெறும். இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகலத்திலேயே 25 மடிக்கணினிகளைக் கொண்டு கண்காட்சி நடைபெறும். காலை 9.30 மணிக்கு துவங்கி மாலை 6.00 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறும். மாணவ மாணவியர்கள், பத்திரிக்கைத் துறையினர்கள், அரசு அலுவலர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் இராணுவத்தினரின் குடும்பத்தினர்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் மடிக்கணினிகளை பார்வையிட்டு அங்கேயே மடிக்கணினிகள் வாங்குவதற்கு முன்பதிவு செய்யலாம். இந்தச் நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளும்படி எல்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. செ. உமாசங்கர், இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொண்டார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

மேலாண்மை இயக்குநர்
எல்காட்